# முன்பதிவு செய்தல்

முன்பதிவு செய்தலை, நகர் மன்ற கட்டிடத்தில் அமைந்துள்ள நகரின் திருமண பதிவு அலுவலகத்திற்கு காலை 8:30 முதல் மாலை 4 மணி வரை நேரில் வந்து செய்துகொள்ளலாம் அல்லது www.brampton.ca/SkipTheLine இல் ஆன்லைனில் செய்யலாம்.

- தேதிகள் மற்றும் நேரம் ஆகியவை, கிடைக்கப்பெறுவதைப் பொருத்திருக்கும்.
- வைபவத்திற்கு முன்பதிவு செய்யும் முன்பாக செல்லத்தக்க திருமண உரிமம் பெற்றிருக்கவேண்டும்.

# அமைவிடம்

குடிமக்கள் திருமண வைபவங்கள் பிரதி வாரம் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, 2, வெலிங்டன் சாலை மேற்கு, ப்ராம்ப்ட்டன் எனும் முகவரியில் அமைந்துள்ள ப்ராம்ப்ட்டன் நகர் மன்ற கட்டிடத்தில் நடத்தப்படும் (சட்டப்படியான விடுமுறைநாட்கள் தவிர்த்து). வைபவம் நடைபெறும் இடத்தில் விண்ணப்பதாரர், சாட்சிகள், விருந்தினர் உள்பட அதிகபட்சமாக எட்டு (8) நபர்கள் மட்டுமே இருக்க இயலும் (விதிவிலக்குகள் கிடையாது). திருமண ஜோடிகள் தங்களுக்கான வைபத்தில் கலந்துகொள்ள உரிய ஆடை அணிகலன் அணிந்தபடி தயாராக வரவேண்டும்; ஏனெனில் ஆடை மாற்றுவதற்கான வசதி இங்கு கிடையாது. வைபவத்தின் கண்ணியம் காக்கும் வகையில் நிகழ்ச்சியின்போது உரிய உடைகள் அணிந்திருப்பது அவசியம்; இருப்பினும் திருமணத்திற்கே உரித்தான ஆடைகள் தேவையில்லை.



உங்களுக்கான குடிமக்கள் திருமண வைபவத்தினை ஆன்லைனில் **www.brampton.ca/SkipTheLine** இல் செய்துகொள்ளவும் அல்லது நகரின் திருமண பதிவு அலுவலகத்திற்கு வருகை புரியவும்!

மேற்கொண்டு தகவல்களுக்கு நகரின் திருமண பதிவு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: Brampton City Hall, 2 Wellington Street West அல்லது அழைப்பதற்கான எண்: 905.874.2101

Alternate formats available upon request.

BRAMPTON

# குடிமக்கள் திருமண சடங்குகள்

# வைபவம்

- திருமண வைபவம் நடைபெறக் கூடிய கால அவகாசம் 30 நிமிடங்களாகும்.
- சிறிதளவிலான மலர் அலங்காரம் அனுமதிக்கப்படும், என்றாலும் வைபவம் முடிந்தவுடனேயே விண்ணப்பதாரர்களே அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.
- மெழுகுவர்த்திகள், கலர் காகித துண்டுகள், ஆசீர்வாத அரிசி, ஊதுபத்தி, நீர்க்குமிழி விடுதல் போன்றவற்றுக்கு வைபவத்திலோ அல்லது நகர் மன்ற கட்டிடத்திலோ அனுமதியில்லை.

# மொழிபெயர்ப்பாளர்கள்

விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கிலம் சரளமாக பேசவோ புரிந்துகொள்ளவோ முடியாது எனில் தங்களுக்கான மொழிபெயர்ப்பாளரை அவர்களே அமர்த்திக் கொள்ள வேண்டும்.

- மொழிபெயர்ப்பாளர் தங்களின் புகைப்பட அடையாள அட்டையை வழங்குவதுடன், திருமண வைபவத்திற்கு முன்னதாகவே மொழிபெயர்ப்பாளருக்கான உறுதிமொழிப் படிவத்தினை நிரப்பித் தரவும் வேண்டும்.
- மொழிபெயர்ப்பாளர் ஒரு சாட்சியாக இருக்க மாட்டார்.




# சாட்சிகள்

திருமண வைபவத்தின்போதுஇரண்டு (2) சாட்சிகள் முன்னிலை வகிக்க வேண்டும். சாட்சிகள் தேவைப்படின் வைபவத்திற்கு மூன்று (3) அலுவல் நாட்கள் முன்னதாக $30 கட்டணத்தில் பதிவு செய்துகொள்ளும் பட்சத்தில் ஏற்பாடு செய்யப்பட இயலும்.

சாட்சிகள் குறைந்தது 16 வயது நிரம்பியவராகவும் ஆங்கிலத்தை நன்றாக பேசவும் புரிந்துகொள்பவராகவும் இருக்க வேண்டும்.

# ரத்து கொள்கை

திட்டமிடப்பட்ட விழாவிற்கு முன்னதாக ஏழு (7) அலுவல் நாட்கள் வரை ரத்து செய்யலாம் மற்றும் அதற்கான கட்டணத்தை திரும்பப் பெறலாம்; எனினும் $50.00 மற்றும் HST  சேர்த்து $56.50 தொகை நிர்வாகக் கட்டணமாக பிடித்தம் செய்யப்படும்.

திட்டமிடப்பட்ட திருமண வைபவத்திற்கு ஏழு (7) அலுவல் நாட்களுக்கு குறைவான நாட்களில் ரத்து செய்யப்பட்டால் திரும்பப் பெறும் தொகை கிடைக்காது.

# தேதி மாற்றம்

வைபவத்திற்கு முன்னர் ஏழு (7) அல்லது அதற்கு அதிகமான அலுவல் நாட்களில்செய்யப்படும் எந்த ஒரு மாற்றத்திற்கும் கட்டணத்தொகை திரும்பப் பெறப்படலாம்; இதில் $50.00 மற்றும் HST ($56.50) நிர்வாகக் கட்டணமாக பிடித்தம் செய்யப்படும்.

வைபவத்திற்கு முன்னர் ஏழு (7) அல்லது அதற்கு குறைவான நாட்களில் மாற்றம் செய்யப்பட்டால், வைபவம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும் மேலும் கட்டணத் தொகையை திரும்பப் பெற இயலாது. தேதி அல்லது நேரம் மாற்றுவதற்கான எந்தவொரு கோரிக்கையும்  அவை கிடைக்கப்பெறும் தன்மைக்கு உட்பட்டது.



# தாமதம் மீதான கொள்கை

திட்டமிட்டபடி வைபவம் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அனைத்துத் தரப்பினரும் (ஜோடிகள் மற்றும் இரண்டு சாட்சிகள்) அவரவரின் திட்டமிடப்பட்ட வைபவத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக ஒன்றுகூடி வருமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

திட்டமிடப்பட்ட வைபவத்திற்கு தாமதமாக வரும் விண்ணப்பதாரர்கள், சாட்சிகள் மற்றும் விருந்தினர்களுக்கு இடமளிக்கப்படாது – விதிவிலக்குகள் கிடையாது.

தாமதமாக வரும் விண்ணப்பதாரர்கள் "நிகழ்ச்சிக்கு வராதவர்கள் " எனக் கருதப்படுவார்கள், வைபவம் ரத்து செய்யப்படும் மற்றும் கட்டணம் திரும்பப் பெற இயலாது. இந்தக் கொள்கைக்கு விதிவிலக்குகள் ஏதுமில்லை.

# கட்டணம்

திருமண வைபவத்திற்கான கட்டணம் $250 மற்றும் HST சேர்ந்து  $282.50 ஆகும். கட்டணத்தில் திருமண உரிமத்தின் கட்டணம் அடங்காது. அதை தனியாக செலுத்த வேண்டும்.

- முன்பதிவு செய்யும் போதே இந்தக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.

22-2932